04.08.2025
OS. No.111/2020
**பி.வா.சா.1 –** திரு.ரெக்ஸ் ஆண்டனி ஜேம்ஸ், த/பெ.டெரி ஜே நாதன்

(சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணை தொடர்ச்சி செய்யப்படுகிறது.)

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி :-**

சொத்தின் வரிவிதிப்பு தற்போது வரை வாதியின் பெயரில்தான் இருந்து வருகிறது என்றால் சரிதான். ஆனால் கட்டணம் நான் செலுத்தி வருகிறேன். 2022-2023 ஆகிய காலத்திற்கு மட்டும் தான் நான் சொத்து வரி செலுத்தியதற்கான ரசீது தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் சரிதான். அதற்கு முன்போ அல்லது பின்போ செலுத்திய வரி ரசீதுகளை தாக்கல் செய்யவில்லை. என் தகப்பனார் செலுத்திய சொத்து வரி ரசீதுகள் கைவசம் இருக்கிறது. அதை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் தவறு. தாக்கல் செய்திருக்கிறேன். பி.வா.சா.ஆ.15 ஆகிய 2015-2016 ஒரே ஒரு ரசீது தான் தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.12 ஆகிய மின் கட்டண ரசீது வீட்டின் முன் பக்கத்தில் இருக்கக்கூடிய கடைக்கு உரியது ஆகும். அது என் அப்பா பெயரில் இருக்கிறது. என் அப்பா பெயரில் மின் இணைப்பு இருப்பதாகவும் மின்கட்டணம் செலுத்தி வருவதாகவும் நாங்கள் தாக்கல் செய்த எதிர் வழக்குரையில் சொல்லவில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. பி.வா.சா.ஆ.12 ஆகிய மின் கட்டண ரசீது எந்த இடத்திற்கு உரியது என்பது தொடர்பாக அதில் எந்த குறிப்பும் இல்லை. அது மின் கட்டண ரசீது என்பதால் அதில் இல்லை. பி.வா.சா.ஆ.12 ஆகிய மின் கட்டண ரசீது வழக்குச் சொத்திற்கு சம்பந்தம் இல்லாத ஆவணம்

என்றால் தவறு ஆகும். ஆண்டிற்கு ஒரு மாதம் வீதம் ஐந்து வருடத்திற்கு செலுத்தப்பட்ட மின் கட்டண ரசீதுகள் தாக்கல் செய்து இருக்கிறேன் என்றால் சரிதான். தொலைபேசி கட்டண ரசீது எங்கள் வீட்டில் பயன்படுத்தப்பட்ட தொலைபேசி இணைப்புக்கு உரியது ஆகும். அதில் கஷ்டமர் டைப் என்பது பிசினஸ் என்று தான் போடப்பட்டு இருக்கிறது. ஆனால் அதை வீட்டிற்கும் பயன்படுத்தலாம். 2017 ஆம் வருடத்திற்கு பிறகு உரிய தொலைபேசி கட்டண ரசீதுகள் இருக்கிறது. தற்போது வரை அந்த தொலைபேசி இணைப்பு பயன்பாட்டில் இருக்கிறது. சென்னை மேற்கு தாம்பரம், கல்யாண் நகர், 2 வது குறுக்கு தெரு என்ற முகவரியில் 2018 ஆம் வருடம் நான் குடியிருந்து வந்தேன் என்றால் என் அப்பாவின் சிகிச்சை காரணமாக அந்த முகவரியில் வசித்து வந்தேன். என் தகப்பனார் வெங்கடேஸ்வரா மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்தார். 2018 ஆம் வருடம் ஜனவரி மாதத்தில் இருந்து 2018 ஆம் வருடம் ஆகஸ்ட் மாதம் வரை என் தகப்பனார் சிகிச்சை பெற்று வந்தார். நான் திருச்சி செயின்ட் ஜோசப் கல்லூரியில் 2002 ம் வருடம் முதல் 2005 ஆம் வருடம் வரை பி.காம் படித்தேன். நான் எம்.சி.ஏ சென்னை லயோலா கல்லூரியில் படித்தேன். எனது சகோதரி சென்னை எத்திராஜ் கல்லூரியில் இளங்கலை பட்டப்படிப்பு படித்தார். ஆனால் எந்த வருடம் படித்தார் என்றால் சரியாக தெரியவில்லை. என் தங்கை எம்.பி.ஏ. பட்டம் மேற்படிப்பு சென்னை லயோலா கல்லூரியில் படித்தார். அது 2009 ஆம் வருடம் ஆகும். 2002 ஆம் வருடத்தில் இருந்து 2012 ஆம் வந்த வரை நானும் என் சகோதரியும் சென்னையில் படித்து வந்தோம் என்றால் சரிதான். நானும் என்

Vaquero

சகோதரியும் விடுதியில் தங்கி படித்தோம். என் அப்பாவும் அம்மாவும் அதே காலகட்டத்தில் திருச்சியில் தான் இருந்தார்கள். நாங்கள் இருவரும் விடுதியில் தான் தங்கி படித்தோம் என்பதை காட்டுவதற்கான ஆவணங்கள் கைவசம் இருக்கிறது. அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய முடியும். 01.12.1986 ல் எனது பாட்டி எனது தாத்தாவிற்கு ஒரு பொது அதிகார பத்திரம் எழுதி பதிவு செய்து கொடுத்தார் என்றும், அந்த பத்திரத்தின் சொத்து விவரத்தில் கண்ட சொத்தானது எனது பாட்டியால் கடந்த 14.11.1957 தேதியில் திரு.பி.ஏ.குரூஸ் அவர்களிடமிருந்து கிரையம் பெற்று அந்த இடத்தில் என்னால் கெட்டி மெத்தை மேல் மெத்தை கட்டிட வகையறா கட்டி ஆண்டு அனுபவித்து வரக்கூடிய சொத்து ஆகும் என்று குறிப்பிட்டு இருக்கிறார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. (பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வழக்குரையில் குறிப்பிடப்படாத சங்கதி என்று ஆட்சேபித்தார்). நான் தாக்கல் செய்துள்ள சத்தியபிரமாண வாக்குமூலத்தில் தமிழில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகள் எனக்கு தெரியும். அதில் தமிழில் எழுதப்பட்டுள்ள விபரங்களை எனக்கு யார் சொன்னார் என்றால் எனது வழக்கறிஞர் சொன்னார். நான் பள்ளியில் படித்த காலத்தில் எனது தாய்மொழி பாடமாக இந்தி மொழி பாடத்தையும், பிரெஞ்சு மொழி பாடத்தையும் நான் எடுத்து படித்தேன். எனக்கு தமிழ் நன்றாக படிக்க தெரியும் என்றும், வழக்கிற்காக எனக்கு தமிழ் சரியாக படிக்கத் தெரியாது என்று மறுக்கிறேன் என்றால் சரியல்ல. Handfones Care Private Limited என்ற பெயரில் சென்னையில் ஒரு நிறுவனம் நடத்தி வந்தேன். 2017 ஆம் வருடம் என் தகப்பனார் வாடகைக்கு நடத்தி வந்த கம்பெனிக்கு

அருகாமையில் தரைத்தளத்திற்கான இரண்டு மெயின் கதவு இருந்தது என்றும் அந்த வழியை பயன்படுத்தக் கூடாது என்பதற்காக என் தகப்பனார் மரப்பலகைகள் கொண்டு அதை அடைத்து விட்டார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் பார்க்கும் வரை அது அலுவலகமாக தான் பயன்படுத்தப்பட்டு வந்தது. எனது பாட்டி அந்த மரப்பலகைகளை அப்புறப்படுத்த வேண்டும் என்று செயல் உறுத்து கட்டளை பரிகாரம் கேட்டு அசல் வழக்கு எண் 334/2017 என தாக்கல் செய்து இருந்தார் என்றால் சரிதான்.(பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வழக்குரையில் குறிப்பிடப்படாத சங்கதி என்று ஆட்சேபித்தார்). இந்த வழக்கின் வாதி என் தகப்பனார் மீது மனை எண்.12 க்கு செல்லும் பாதையை தடுக்கக்கூடாது என நிரந்தர உறுத்து கட்டளை பரிகாரம் கேட்டு ஒரு வழக்கு தாக்கல் செய்தார் என்றால் சரிதான். (பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வழக்குரையில் குறிப்பிடப்படாத சங்கதி என்று ஆட்சேபித்தார்). மனை எண்.12 க்கு செல்லும் பாதையை நான் தடுக்கும் விதமாக மெட்டீரியல்கள் போட்டு வைத்து வாதி அனுபவம் செய்து வருவதற்கு இடையூறு செய்து வருகிறேன் என்று சொன்னால் தவறு ஆகும். மனை எண் 12 க்கு செல்வதற்கு வேறு ஒரு வழி இருக்கிறது. மனை எண்.12 க்கு செல்லும் பாதையை தடை செய்யக்கூடாது என நீதிமன்றம் இடைக்கால உறுத்துக்கட்டளை வழங்கி இருக்கிறது என்று சொன்னால் சரிதான். தற்போது வரையிலும் எனக்கு சொந்தமான நான்கு சக்கர வாகனம் மற்றும் தெரிந்தவர்களுக்கு சொந்தமான நான்கு சக்கர வாகனங்கள் ஆகியவற்றை அந்தப் பகுதியில் நிறுத்தி வைத்து நீதிமன்ற உத்தரவை அவமதித்து வருகிறேன் என்று

Agaram

சொன்னால் வீட்டிற்கு முன்பாக எங்களிடத்தில் தான் அவ்வாறு நிறுத்தி வைத்து இருக்கிறேன். எங்கள் வீட்டுக்கு முன்பாக என்று நான் சொல்லக்கூடிய இடம் தான் மனை எண் 12 க்கு செல்லக்கூடிய பாதை என்று சொன்னால் சரிதான். தற்போது அந்த இடத்தில் ஒரு சிவப்பு கலர் நான்கு சக்கர வாகனம் எனது நண்பராகிய ஒரு வழக்கறிஞருக்கு உரியது அங்கு நிறுத்தப்பட்டு இருக்கிறது என்றால் சரிதான். வாதியும், அவரது வாடகைதாரர்களும் அந்த இடத்தில் அமைதியாக அனுபவம் செய்வதை இடையூறு செய்ய வேண்டும் என்ற எண்ணத்தில் அவர்களுக்கு தொந்தரவு கொடுக்க வேண்டும் என்ற எண்ணத்தில் தொடர்ந்து இடையூறு செய்து வருகிறேன் என்று சொன்னால் தவறு ஆகும். நான் கார் வாங்கிய காலத்தில் இருந்து அந்த இடத்தில் தான் வாகனத்தை நிறுத்தி வைத்திருக்கிறேன். 2004 முதல் 2017 வரை நானும் என் பெற்றோர்களோ திருச்சியில் வசித்தது கிடையாது என்றும், சென்னையில் தான் நாங்கள் வசித்து வந்தோம் என்றும் தாவா சொத்தை அனுபவம் செய்தது கிடையாது என்று சொன்னால் சரி அல்ல. 2014 ஆம் வருடத்தில் இருந்து வாதியின் தாயாருக்கும் என் தகப்பனாருக்கும் இடையில் சுமூகமான உறவு கிடையாது என்றும் வழக்கிற்காக நான் உதவி செய்ததாகவும் மாத்திரை மருந்துகள் வாங்கிக் கொடுத்ததாகவும் பொய்யாக சொல்கிறேன் என்றால் தவறு ஆகும். எங்கள் அத்தை மொத்த சொத்தையும் அபகரிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் எங்களுடன் வாதியின் தாயாரை பழகவிடவில்லை. எங்கள் அத்தை எங்களின் பாசமிகு பாட்டியை அழைத்துச் சென்று விட்டார் என்று பேரனாகிய நான் கேட்கவில்லையா என்றால் வழக்கு

Adobe

எதுவும் பதிவு செய்யவில்லை. ஆனால் அவரிடம் கேட்டோம். நான் சொல்வது போல் நானும், என் தகப்பனாரும், எங்கள் பாட்டிக்கு அன்பை கொடுத்து இருந்தால் அவர் தாவாச் சொத்தை எங்களுக்கு தான் கொடுத்திருப்பார் என்றும் வாதிக்கு கொடுக்க வேண்டிய வாய்ப்பு கிடையாது என்றால் ஆரம்பத்தில் இருந்தே எங்கள் அத்தை சொத்தை அபகரிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் அவ்வாறு செயல்பட்டு வந்தார். நானும், என் தகப்பனாரும் எங்கள் பாட்டிக்கு அன்பு செலுத்தாத காரணத்தினால் அன்பு செலுத்திய எங்கள் அத்தைக்கு அவர் சொத்தை எழுதிக் கொடுத்தார் என்றால் தவறு ஆகும். என் அத்தை திருமண காலத்தில் இருந்து சென்னையில் தான் வசித்து வந்தார். நானும் என் தகப்பனார் மற்றும் தாயாரும் தேனும், பாலும் ஊட்டி 1976 ல் இருந்து 2018 வரை எங்கள் பாட்டியை பராமரித்து வந்தோம், ஆனால் எங்கள் பாட்டி சொத்தை நீங்கள் அத்தைக்கு கொடுத்து விட்டார் என்று கூறுகிறோமா என்றால் எங்கள் பாட்டியின் வயதான காலத்தில் அவரைக் கூட்டிக் கொண்டு போய் வைத்து எழுதி வாங்கி விட்டார்கள். 2016 ஆம் வருடத்திற்கு பிறகு எங்கள் பாட்டியை அணுகி ஏன் சொத்தை அத்தைக்கு எழுதிக் கொடுத்தீர்கள் என்று கேட்டோமா என்றால் 2016 ஆம் வருடத்திற்கு பிறகு அத்தை எங்களை எங்கள் பாட்டியை பார்க்க விடவில்லை. கல்யாணத்திற்கு கூட வரவிடாமல் தடுத்துவிட்டார். எனது திருமணத்திற்கும் என் சகோதரியின் திருமணத்திற்கும் எங்கள் பாட்டிக்கு திருமண அழைப்பி கொடுக்கவில்லை என்றும், ஆனால் அதை மறைப்பதற்காக எங்கள் பாட்டியை அத்தை வரவிடாமல் தடுத்ததாக

வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. சொத்தை வாங்குவதற்கு என் தாத்தா தான் பணம் கொடுத்தார் என்ற விபரம் எனக்கு யார் சொல்லி எப்போது தெரியவந்தது என்றால் என் தகப்பனார் அவ்வாறு சொன்னார். என் தகப்பனார் அவ்வாறு எப்போது சொன்னார் என்பது சரியாக தெரியவில்லை. கடந்த 2000 ஆம் வருடத்தில் இருந்து அவ்வாறு சொன்னார். என் தகப்பனாருக்கு அந்த விபரம் எப்படி தெரியும் என்று நான் அவரிடம் கேட்கவில்லை. என் தகப்பனார் தாக்கல் செய்த வழக்கானது அவருக்கு அந்த ஆவணம் குறித்து தெரிய வந்த பிறகு மூன்று வருட காலத்திற்கும் தாக்கல் செய்து இருக்க வேண்டும் என்றும், ஆனால் மூன்று வருட காலம் கழித்து வழக்கை தாக்கல் செய்திருப்பதால் காலம் வரையறை சட்டத்தின் கீழ் வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்று சொன்னால் சரியல்ல. என் தகப்பனார் தாக்கல் செய்த வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டும் என்று இந்த வழக்கின் வாதி தாக்கல் செய்த மனுவானது தள்ளுபடி செய்யப்பட்டு அதன் பேரில் மாண்புமிகு உயர்நீதிமன்றத்தில் சீராய்வு வழக்கு நிலுவையில் இருக்கிறது என்றால் சரிதான். என் சகோதரிக்கும் எனக்கும் இடையில் எந்த பிரச்சனையும் இல்லை. என் சகோதரி திருமணத்திற்கு பிறகு அமெரிக்காவில் வசித்து வருகிறார். என் சகோதரியின் முகவரியை கேட்டு வாதி தன் வழக்கறிஞர் மூலம் அனுப்பிய அறிவிப்பிற்கு தற்போது வரை நாங்கள் முகவரியையும் தெரிவிக்காமலும், பதில் அளிக்காமலும் இருந்து வருகிறோம் என்றால் அதுபற்றி தெரியாது. (பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வழக்குரையில் குறிப்பிடப்படாத சங்கதி என்று ஆட்சேபித்தார்). தாவாச் சொத்திற்கான மின்

இணைப்பு தற்போது வாதியின் பெயரில்தான் இருந்து வருகிறது என்றால் தவறு ஆகும்.மின் இணைப்பு என் பாட்டியின் பெயரிலும் என் தகப்பனார் பெயரிலும் இருந்து வருகிறது. நீதிமன்றத்தில் பொய் சாட்சி அளித்தால் தண்டிக்கப்படக்கூடிய குற்றம் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். மின் இணைப்பு பெயர் மாற்றம் வாதி பெயருக்கு செய்யக்கூடாது என மின்சார வாரியம் மீது ஒரு வழக்கு தாக்கல் செய்தோம் என்றால் சரிதான். மின் இணைப்பு பெயர் மாற்றம் செய்யப்பட்ட பிறகு தான் அந்த வழக்கை தாக்கல் செய்தோம் என்றால் தவறு ஆகும். மீண்டும் தற்போது மின் இணைப்பு என் அப்பா பெயரிலும், பாட்டி பெயரிலும் தான் இருக்கிறது. மின் இணைப்பு தற்போது வரை வாதியின் பெயரில் தான் இருந்து வருகிறது என்றும் வழக்கிற்காக என் அப்பா பெயரிலும், பாட்டி பெயரிலும் இருப்பதாக பொய்யான சொல்கிறேன் என்றால் சரியல்ல. தாவாச் சொத்து என் பாட்டிக்கு கிரையப்பூர்வமாக பாத்தியப்பட்ட சுய சம்பாத்திய சொத்து என்றும் அதை அவர் தன்னுடைய மகளுக்கு தான செட்டில்மெண்ட் பத்திரம் மூலம் எழுதிக் கொடுத்ததால் தாவாச் சொத்து முழுவதும் வாதிக்கு மட்டும்தான் பாத்தியம் என்று சொல்கிறார் என்றால் அது தவறாகும். எங்கள் தாத்தாவின் சுய சம்பாத்திய வருமானத்தைக் கொண்டுதான் சொத்து வாங்கப்பட்டது. என் தாத்தா Air ceylon நிறுவனத்தில் Traffic Officer ஆக வேலை பார்த்து வந்தார். இந்த விபரத்தை என் அப்பா என்னிடம் தெரிவித்தார். நான் சொல்வது போல் சொத்தில் உரிமை குறித்து எந்தவித மேகமூட்டமும் நிலவவில்லை என்பதால் வாதி விளம்புகை பரிகாரம் கேட்டு அசல் வழக்கை தாக்கல் செய்ய வேண்டிய அவசியம்

Apex

ஏற்படவில்லை என்றால் சரியல்ல. நான் தாவா சொத்தில் அனுமதியின் அடிப்படையில் அனுபவித்து வந்ததை வாதி அந்த அனுமதியை ரத்து செய்த பிறகு சொத்தை காலி செய்யாமல் சட்டத்திற்கு புறம்பான வகையில் குடியிருந்து வருகிற சொத்திற்கு நஷ்ட ஈடு கொடுக்க கடமைப்பட்டு இருக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்தை வாதி அசல் வழக்கில் கேட்டவாறு காலி செய்து நான் கொடுக்க கடமைப்பட்டவன் என்று சொன்னால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை:–</u>** இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்கறிஞர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு, சாட்சியிடம் படித்து காட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு கைரேகை/கையொப்பம் செய்யப்பட்டது.

(ஒம்.). XXXX,
முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
திருச்சிராப்பள்ளி.